# தமிழ்நாடு அரசு
# கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம்

**(தன்னாட்சி)**

**(ஆசிரியர் கல்லூரி)**

எண்.577, அண்ணா சாலை,
சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
தொலைபேசி : 044-2435 8351
www.iasetamilnadu.ac.in
**College Code: 10203**
E-mail : iasesaidapet@gmail.com

Reaccredited with B Grade by NAAC
(3rd Cycle)

# நாட்காட்டி
# 2022-2023

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே! உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

*– மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை*

# வந்தே மாதரம்

வந்தே மாதரம்! (2)
ஸுஜலாம், ஸுபலாம், மலயஜ ஸீதலாம்
ஸஸ்ய ஸ்யாமலாம் மாதரம் – வந்தே மாதரம்!
ஸீப்ர ஜ்யோத்ஸ்நா புலகித யாமிநீம்
புல்ல குஸுமித த்ரும தள ஸோபிநீம்
ஸீஹாஸிநீம், ஸுமதுர பாஷிநீம்
ஸுகதாம், வரதாம், மாதரம்! – வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

*– பங்கிம் சந்திர சாட்டர்ஜீ*

# தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
    பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
    திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாச்சல யமுனா கங்கா
    உச்சல ஜலதித் தரங்கா
தவசுப நாமே ஜாகே
    தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
    ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
    ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
    ஜய ஜய ஜய ஜய ஹே!

*– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*



எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

## கொடி வணக்கம்

தாயின் மணிக்கொடி பாரீர் – அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர் ! (தாயின்)
ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் – அதன்
உச்சியின்மேல் வந்தே மாதரம் என்றே
பாங்கின் எழுதி திகழும் செய்ய
பட்டொளி வீசி பறந்தது பாரீர் – (தாயின்)
கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர் – எங்கும்
காணரும் வீரர் பெருந்திரள் கூட்டம்
நம்பற் குரியவர் அவ்வீரர் – தங்கள்
நல்லுயி ரீந்துங் கொடியினைக் காப்பர் (தாயின்)

*– மகாகவி சுப்பிரமணிய பாரதியார்*

## திருக்குறள்

கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

*– திருவள்ளுவர்*

குழந்தைகளின் உடல், உள்ளம், ஆன்மா
ஆகிய ஆளுமைக் கூறுகளின் சிறந்த
பண்புகளை, ஒருமித்த வளர்ச்சியாக
வெளிக்கொணரும் செயல்முறையே
கல்வியாகும்.

*– காந்தியடிகள்*

## நல்லாசிரியர்

குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலை பயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியலறியவோ டுயர் குணம் இணையவும்
அமைபவன் நூலுரை யாசிரியன்னே!

*– பவணந்தியார்*



இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

# நல்லாசிரியனாக விளங்க எடுத்துக்கொள்ளும் உறுதிமொழி

ஆசிரியப்பணி மிகவும் பொறுப்புடையது என்பதனை நான் நன்கு உணர்கிறேன். பயிற்சிபெற்று முழுமையும் தகுதியுடைய ஆசிரியராக விளங்கவும், நான் அப்பொறுப்பினைச் செம்மையாக நிறைவேற்றவும் உண்மையுடன் உழைப்பேன். அவ்வாறு உழைக்கவும், ஆசிரியரது பண்புக்கும், மதிப்புக்கும் சிறிதும் இழுக்கு நேராத வகையில் திகழவும் கீழ்கண்ட உறுதிமொழிகளை நான் மனமுவந்து ஏற்கிறேன்.

1. ஆசிரியர் பணியின் மதிப்புக்குக் குறைவு தரும் வகையில் உடைகளை ஒருபோதும் அணியேன்.
2. குறித்த காலத்தில் பணியாற்றச் செல்வேன்.
3. நான் கற்பிக்க வேண்டியவற்றைப் பற்றித் திட்டமிட்டு நாள்தோறும் தயார் செய்வேன்.
4. ஆசிரியர் பணி மதிப்புக்கு இழுக்கு ஏற்படும் வகையில் மாணவருடனோ, மற்றவருடனோ பழகேன்.
5. பாட அறிவைப்பெருக்கவும், பொது அறிவை வளர்க்கவும் தேவைப்படும் சிறந்த நூல்களைப் படிப்பதில் என் ஓய்வு நேரத்தைச் செலவிடுவேன்.
6. மாணவர்கள் ஒழுக்க சீலர்களாக விளங்க, நான் முன் மாதிரியாக இருந்து வழிகாட்டுவேன்.
7. ஆசிரியர் பணிக்குப் பெருமைதரும் விதத்தில் பிற ஆசிரியருடனும், தலைமையாசிரியருடனும் பழகுவேன்.
8. கல்வித்துறைக் கட்டுப்பாடுகளுக்குப் புறம்பாக செல்லாத வகையில் சமூகத் தொண்டாற்ற முயல்வேன்.



எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு
பொய்யா விளக்கே விளக்கு.

# உறுதிமொழி

## தாய்நாடு

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது சகோதர, சகோதரிகள் ஆவர்.

நான் எனது நாட்டினை நேசிக்கிறேன். செல்வாக்குள்ளதும், பலதரப்பட்டதுமான அதன் பாரம்பரியத்தில் நான் பெருமிதம் கொள்கிறேன். அதற்குத் தகுதியுடையவனாயிருக்க எப்பொழுதும் முயல்வேன்.

எனது பெற்றோர், ஆசிரியர், பெரியோர்கள் அனைவரிடமும் மரியாதை செலுத்துவேன். எல்லோரிடமும் பண்புடன் நடந்து கொள்வேன். எனது நாட்டினரிடமும், மக்களிடமும் பக்தி கொள்வேன் என உறுதிமொழிகிறேன். அவர்களது நல்வாழ்விலும், வளர்ச்சிகளிலும் என் மகிழ்ச்சி அடங்கியுள்ளது.

## தேசிய ஒருமைப்பாடு

நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்த செயல்படுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்.

ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், இனம், ஜாதி, சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும், அமைதி நெறியிலும், அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன் என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த உண்மையுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தன்னலமின்மையை அடிப்படையாகக் கொண்டு எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ மனம், வாக்கு, காயம் போன்ற எதனையும் சமூக வேற்றுமை ஏற்படும் வண்ணம் உபயோகிக்க மாட்டேன் என்று உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற, சுதந்திரமான சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும், பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதை உணர்வேன். இந்த அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.



யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

## கல்லூரியின் வரலாறு

கல்வியியல் மேம்பாட்டு நிறுவனமாக இயங்கிக் கொண்டிருக்கும் இக்கல்லூரி, இதற்கு முன்னர் வருடம் ‘‘ஆசிரியர் கல்லூரி’’ என்று அழைக்கப்பட்டது. இது நம் மாநிலத்தின் மிகப்பழமையான மற்றும் மிகப்பெரிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி. இது ஆசிய நாட்டின் முதல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியாகவும் திகழ்கிறது.

1856-ஆம் ஆண்டு ‘‘அரசினர் ஆரம்ப ஆசிரியர் பயிற்சிப் பள்ளி’’யாக சென்னை வேப்பேரியில் தொடங்கப்பட்டது. பின்னர் 1887-இல் சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு செயல்பட ஆரம்பித்தது. பின்னர் அதே ஆண்டு இந்நிறுவனம் சைதாப்பேட்டைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு ‘‘ஆசிரியர் கல்லூரி’’ என்ற பெயருடன் செயல்பட ஆரம்பித்தது. 1888-இல் இக்கல்லூரியில் இருந்து முதன் முறையாக பல்கலைக்கழகத்தில் எல்.டி. (L.T.) தேர்வுக்கு அனுப்பப்பட்டனர். 1889-இல் இக்கல்லூரிக்கென்று தனியாக கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

இதுவரையில் கல்வித்துறையால் நடத்தப்பட்ட கல்லூரி ஆசிரியர் சான்றிதழ் தேர்வுக்குப் (Collegiate Teacher’s Certificate Examination) பதிலாக பல்கலைக்கழக எல்.டி. (Licentiate in Teaching) தேர்வுக்கு மாணவர்கள் அவர்களின் விருப்பப்படி அனுப்பப்பட்டனர். 1892-இல் கல்லூரி ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் தேர்வு நிறுத்தி வைக்கப்பட்டது.

1897-இல் மாணவர் விடுதிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. 1904-இல் சிறுவர்களுக்கான விளையாட்டு முறைகல்வி வகுப்புக்கெனத் தனியாக ஒரு கட்டடம் கட்டப்பட்டது. 1914-இல் கைவினைப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1944-இல் சென்னைப் பல்கலைக்கழகம் எல்.டி. (L.T.) படிப்பை பி.டி. (B.T.) எனப் பெயர் மாற்றம் செய்தது. 1949-ஆம் வருடம் தமிழாசிரியர் பயிற்சிப்பிரிவும், இடைநிலை ஆசிரியர்களுக்கு கல்லூரியில் ஆசிரியர்



உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

சான்றிதழ் பட்டப்படிப்பும் ஆரம்பிக்கப்பட்டது. 1952-இல் இக்கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் படிப்பைச் சென்னைப் பல்கலைக்கழகம் குறுகிய கால பி.டி. (Shortened B.T.) என அங்கீகாரம் அளித்தது. 1953-இல் எம்.எட். (M.Ed.) பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1956ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. 1956-57 முதல் கல்வியியல் விரிவாக்கப்பணி ஆரம்பிக்கப்பட்டது.

1972- ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் பி.டி. படிப்பை பி.எட். என பெயர் மாற்றம் செய்தது. 1974-இல் எம்.எட். மாலை நேர வகுப்பு நிறுத்தப்பட்டது. நவம்பர் 1975 முதல் குறுகிய கால இளங்கலை கற்பித்தல் படிப்புத் துவங்கப்பட்டது. 1977-78 முதல் உயர்கல்வி பட்டச் சான்றிதழ் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கல்லூரியின் 125-வது ஆண்டு விழா 30-03-1981 அன்று கொண்டாடப்பட்டது. 1981-இல் ''ஆசிரியர் கல்லூரி'' என்பது ''அரசு கல்வியியல் கல்லூரி'' எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1986-ல் நிறைஞர் பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்பட்டது. 1986-1987 முதல் கல்வியியல் முனைவர் பட்டப்படிப்பு (Ph.D.,) பெறுவதற்குப் பகுதி நேரமாகவும், முழு நேரகமாகவும் ஆராய்ச்சி செய்ய அனுமதிக்கப்பட்டது. 1988-இல் மத்திய அரசின் நிதி உதவியுடன் ''அரசு கல்வியியல் கல்லூரி'' என்பது ''கல்வியியல் மேம்பாட்டு நிறுவனமாக'' தரம் உயர்த்தப்பட்டது. 01-03-2006ஆம் ஆண்டு கல்லூரியின் 150வது ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. 2008-ஆம் ஆண்டு முதல் இக்கல்லூரி தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழத்தோடு இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 2010ஆம் ஆண்டு எம்.எட்., வகுப்பில் கூடுதலாக 10 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். 2011ஆம் ஆண்டு எம்ஃபில் வகுப்பில் கூடுதலாக 6 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்.

2015 - 2016-ம் ஆண்டு முதல் B.Ed. மற்றும் M.Ed. பாடத்திட்டங்கள் இரண்டு ஆண்டுகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. B.Ed. மற்றும் M.Ed. வகுப்புகளுக்கு முதலாம் ஆண்டிற்கு தலா 200 மற்றும் 50 மாணவர்கள் சேர்க்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரி 165வது ஆண்டு அடியெடுத்து வைத்துள்ளது.



அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

## இக்கல்லூரியின் வளர்ச்சியில் ஆண்டு வாரியான திருப்பு முனைகள்

1856 நம் கல்லூரி சென்னை வேப்பேரியில் நிறுவப்பட்டது. திரு. ஜே.டி. ஃபௌலர் முதல் முதல்வர்.

1862 சென்னை அண்ணா சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

1887 சென்னைப் பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டு, அதே ஆண்டு ''ஆசிரியர் கல்லூரி'' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1888 கற்பித்தலில் தகுதிச் சான்றிதழ் (எல்.டி.) தேர்வுக்கு மாணவர்கள் முதன்முதலாக அனுப்பப்பட்டனர்.

1889 கல்லூரி வளாகம் கட்டப்பட்டது.

1892 பெண்களும் இக்கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

1897 கல்லூரி விடுதி கட்டப்பட்டது.

1904 சிறுவர்களுக்குரிய விளையாட்டு முறைக்கல்வி வகுப்புக்கான கட்டிடம் கட்டப்பட்டது.

1914 கைவினைப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1923 கலை மற்றும் கைத்தொழில் வகுப்புகள், கைவினைப் பயிற்சியுடன் இணைக்கப்பட்டது.

1927 முதியோர்களுக்கான இரவுப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

1944 பல்கலைக்கழக எல்.டி. படிப்புக்கு அங்கீகாரம் அளித்து, பி.டி. என்று பெயர் மாற்றம் செய்தது.

1949 தமிழாசிரியர் பயிற்சிப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. பட்டப்படிப்பு முடித்த இடைநிலைப் பயிற்சி ஆசிரியர்களுக்குக் குறுகியகால இளங்கலைக் கற்பித்தல் பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1953 எம்.எட்., பட்டப் படிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1956 நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.

1972 சென்னைப் பல்கலைக்கழகம் பி.டி. படிப்பை பி.எட். என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1974 மேம்பட்ட கல்வி உளவியல் என்ற விருப்பப் பாடத்துடன் மாலைநேர எம்.எட். பட்டப்படிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1975 மாலை நேர எம்.எட். பட்டப்படிப்பில் மேம்பட்ட கல்வியியல் நிர்வாகம் என்ற விருப்பப்பாடம் கூடுதலாக சேர்க்கப்பட்டது.

1977 டிசம்பரில் உயர்கல்வி, பட்டயச் சான்றிதழ் படிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1981 125-வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.



தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

1981 ''ஆசிரியர் கல்லூரி'' என்ற பெயர் ''அரசு கல்வியியல் கல்லூரி'' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1986 ஆய்வியல் நிறைஞர் (M.Phil) படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

1986-87 முனைவர் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

1988 கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் என தகுதி உயர்த்தப்பட்டு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநகரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

1993 கல்லூரிக் கல்வி இயக்குநகரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது.

1998 தமிழாசிரியர் பயிற்சிப் பிரிவுக்குப் பதிலாக, பி.எட். தமிழ் வகுப்பில் கூடுதலாக 20 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்.

2003 இரண்டாண்டுகளுக்கு பிறகு எம்.எட். (M.Ed.) பட்டப்படிப்பு மீண்டும் கொண்டு வரப்பட்டது.

2005 கல்லூரிக்குத் தன்னாட்சி வழங்கப்பட்டது. பி.எட். படிப்பில் கூடுதலாக 5 மாணவர்கள் (மாற்றுத் திறனாளிகள்) சேர்க்கப்பட்டனர்.

2006 இராணுவப் பயிற்சியோடு இணைந்த ஆசிரியர் பயிற்சி வழங்கப்பட்டது.

2006 150ஆம் ஆண்டு துவக்கவிழா (01-03-2006) கொண்டாடப்பட்டது.

2008 புதிதாக தொடங்கப்பட்ட தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகத்தின் கீழ் நமது கல்லூரி இயங்க ஆரம்பித்தது.

2010 எம்.எட். வகுப்பில் கூடுதலாக 10 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்.

2011 எம் ஃபில் வகுப்பில் கூடுதலாக 6 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்.

2015 B.Ed மற்றும் M.Ed இரண்டு ஆண்டு காலங்களாக மாற்றப்பட்டது.

2015 M.Ed படிப்பில் கூடுதலாக 15 மாணவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2018 கல்லூரிக்குத் தன்னாட்சி மற்றும் அங்கீகாரம் 2021 வரை அளிக்கப்பட்டது.

2020 மார்ச் 27 முதல் ஆகஸ்டு 2 வரை கோவிட் 19 சூழல் காரணமாக கல்லூரியானது மூடப்பட்டது. பிறகு ஆகஸ்டு 3 அன்று அரசின் உத்தரவின்படி கல்லூரியானது மீண்டும் திறக்கப்பட்டது. பி.எட்., எம்.எட்., எம்ஃபில் மாணவர்களுக்கு அரசு நெறிமுறைகளை பின்பற்றி இணைய வழியே வகுப்புகள் நடத்தப்பட்டன.

2021 அரசு ஆணைப்படி நேரடி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.



ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

## இட அமைப்பு

அண்ணா சாலையில் அடையாறு நதிக்கரையோரம், சுமார் 20.5 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையிலிருந்து சுமார் 8.2 கிலோமீட்டர் தூரத்திலும், சைதாப்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து 750 மீட்டர் தூரத்திலும் இக்கல்லூரி அமைந்துள்ளது.

## முதல்வர்களின் கால வரிசைப் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஜே.டி. ஃபௌலர் | 1856 - 1859 |
| 2. | திரு. ஜே. ஆண்டர்சன் | 1859 - 1867 |
| 3. | திரு. ஜி. பைக்கில் | 1867 - 1884 |
| 4. | திரு. ஜி. டங்கன் | 1884 - 1886 |
| 5. | திரு. ஜே.எச். ஸ்டோன் | 1886 - 1887 |
| 6. | திரு. ஏ.எ.ஹால் | 1887 - 1912 |
| 7. | திரு. எச்.எஸ். டங்கன் | 1912 - 1914 |
| 8. | திரு. ஏ.ஐ. மேத்யூ | 1914 - 1915 |
| 9. | திரு. எச்.எஸ். டங்கன் | 1915 -1918 |
| 10. | திரு. டி.வி. சிவகுமார சாஸ்திரியார் | 1918 - 1920 |
| 11. | திரு. ஆர்.ஜி. கிரீவ் | 1920 - 1922 |
| 12 | திரு. பி. சங்குன்னி | 1922 அக்டோபர் |
| 13. | திரு. ஆர். டபிள்யூ ராஸ் | 1922 - 1925 |
| 14. | திரு. இ. டபிள்யூ கிரீன் | 1925 - 1926 |
| 15. | திரு. எச். சேம்பியன் | 1926 - 1930 |
| 16. | திரு. ஏ. இராமராவ் | 1930 - 1931 |
| 17. | திரு. ஆர்.எம். ஸ்டேத்தம் | 1931 - 1934 |
| 18. | திரு. பி.கே. அனந்தநாராயண ஐயர் | 1934 - 1935 |
| 19. | திரு. என்.ஆர். கிருஷ்ணம்மா | 1935 - 1942 |
| 20. | திரு. சி.என். கணபதி ஐயர் | 1942 - 1944 |
| 21. | திரு. ஜே. பிரான்கோ | 1944 - 1946 |
| 22. | திரு. டி.வி. அப்பர் சுந்தரம் | 1946 - 1948 |
| 23. | திரு. டி.வி. மார்கசகாய செட்டியார் | 1948 |
| 24. | திரு. ஆர்.வி. அரங்கநாத முதலியார் | 1948 - 1950 |
| 25. | திரு. முனைவர் எம்.டி. பால் | 1950 - 1952 |
| 26. | திரு. டி.பி. சந்தான கிருஷ்ண நாயுடு | 1952 - 1955 |
| 27. | திரு. எம்.ஆர். பெருமாள் முதலியார் | 1955 - 1965 |



கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்ற யவை.

| | |
|---|---|
| 28. திரு. வி. கோவிந்தராஜன் | 1966 - 1967 |
| 29. திரு. கே.ஆர். மாணிக்கம் | 1967 - 1973 |
| 30. திரு. எஸ்.ஆர். மெசியா தாஸ் | 1973 - 1978 |
| 31. திரு. பி.வி. சீனிவாசன் | 1978 - 1980 |
| 32. திரு. எஸ். சந்தானம் | 1980 - 1981 |
| 33. திரு. ஆர். பொன்னுசாமி | 1981 - 1984 |
| 34. திரு. எம். கணபதி | 1984 - 1985 |
| 35. திரு. ஏ.எஸ். துரைசிங் | 1985 - 1986 |
| 36. திரு. டி. முகமது ஜக்ரியா பாஷா | 1986 - 1989 |
| 37 திரு. முனைவர் ஏ. பன்னீர்செல்வம் | 1989 - 1990 |
| 38. முனைவர் கிருஷ்ணவேணி அருணாச்சலம் | 1990 - 1995 |
| 39. திரு. எல். ஜானகிராமன் | 1995 - 1997 |
| 40. முனைவர் பி. கலியபெருமாள் | 1997 - 1998 |
| 41. முனைவர் (திருமதி) ஜி. பரிமளா | 1998 - 2002 |
| 42. திருமதி. மாலினி சுப்பிரமணியன் | 2002 - 2004 |
| 43. திருமதி. ப. சந்திரா | 2004 - 2005 |
| 44. முனைவர் வி.நாகேந்திரன் (பொறுப்பு) | 2005 ஜுன் |
| 45. திரு. எம்.முகமது ஷெரீப் (பொறுப்பு) | 2005 ஆகஸ்ட் |
| 46. திருமதி. ரோஸ்லின் பெர்சி (பொறுப்பு) | 2005 நவம்பர் |
| 47. திரு. கே. தயான் சந்திரபூஷன் (பொறுப்பு) | 2005 டிசம்பர் |
| 48. முனைவர் எஸ்.பாண்டியன் | 2007 - 2008 |
| 49. திருமதி. சந்திரிகா பிரான்சிஸ் | 2008 - 2009 |
| 50. முனைவர் த.ராஜா ஆபிரகாம் தேவகுமார் | 2009 - 2010 |
| 51. முனைவர் த.விஸ்வலிங்கம் (பொறுப்பு) | 2010 |
| 52. முனைவர் (திருமதி.) ஜி.ஹேமலதா (பொறுப்பு) | 2010 - 2012 |
| 53. முனைவர் (திருமதி.) பா.இரா.உமாராணி (பொறுப்பு) | 2012 |
| 54. முனைவர் (திருமதி.) ஜெ.உமா | 2012 - 2013 |
| 55. முனைவர் (திருமதி.) சோ.நிர்மலாதேவி | 2013 - 2015 |
| 56. முனைவர் வெ.சந்திரசேகரன் (பொறுப்பு) | 2015 அக்டோபர் |
| 57. முனைவர் வெ.கலையரசி (பொறுப்பு) | 2015-2016 |
| 58. முனைவர் கோ.கௌதமன் (பொறுப்பு) | 2018 மே |
| 59. முனைவர் (திருமதி.) இரா.சுமதி | 2018 ஜுன் - 2019 செப் |
| 60. முனைவர் (திருமதி.) அ.வசந்தி (பொறுப்பு) | 2019 செப் - 2020 ஜன |
| 61. முனைவர் (திரு.) கோ.கிருஷ்ணன் | 2020 ஜன-2020 செப் |
| 62. முனைவர் பா.முத்துப்பாண்டி செல்வி (பொறுப்பு) | 2020 செப்-2021 நவ |
| 63. முனைவர் திரு. அ.சுப்ரமணி | நவம்பர் 2021 முதல் |

# கல்லூரி பேராசிரியர்கள்

## *முதல்வர்*

1. முனைவர் (திரு) **ஆ. சுப்ரமணி**
எம்.எஸ்ஸி. (தாவரவியல்), எம்.பில்., எம்.எட்., பி.எச்.டி.,

## *கல்வியியல் துறை*

1. முனைவர் **சு.பிரபு சங்கர்**
எம்.எஸ்ஸி.(கணிதம்), எம்.எஸ்.சி.(உளவியல்), எம்.ஏ.(சமூகவியல்), எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி., பி.ஜி.டி., எச்.இ., உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

2. முனைவர் (திரு) **பூ.சேகர்**
எம்.எஸ்.சி., (விலங்கியல்), எம்.எஸ்.சி.(உளவியல்), எம்.எட்., எம்.ஃபில்., பி.ஜி.டி., எ.சி.இ., பி.எச்.டி.(விலங்கியல்), பி.எச்.டி.(கல்வியியல்)

3. திரு. **வே. அசோகன்**
எம்.எஸ்.சி.,(விலங்கியல்), எம்.ஃபில்., எம்.எட்., எம்.எஸ்.சி.(உளவியல்),
எம்.பி.ஏ., (கல்வி மேலாண்மை)
வரலாற்றுத்துறை மற்றும் புவியியல்துறை, துறைத்தலைவர் (பொறுப்பு)

4. காலிப் பணியிடம்

5. காலிப் பணியிடம்

6. காலிப் பணியிடம்

## *தர்க்கவியல் துறை*

7. காலிப் பணியிடம்

## *தமிழ்த்துறை*

8. திருமதி. **பொ. சண்முகவடிவு**
எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., உதவிப் பேராசிரியர் (ஒப்பந்தம்)

9. காலிப் பணியிடம்

10. காலிப் பணியிடம்

## *ஆங்கிலத்துறை*

11. முனைவர் (திருமதி.) **ந.கோ.கபிலாஷோபினி**
எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்., பி.எச்.டி., இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

12. முனைவர் (செல்வி) **பா.முத்துப்பாண்டி செல்வி**
எம்.ஏ., எம்.எட்., பி.எச்.டி., உதவிப் பேராசிரியர் மற்றும்
தமிழ் துறைத்தலைவர் (பொறுப்பு)



அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

13. முனைவர் **அ. ஜாவித்**

எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி., உதவிப் பேராசிரியர் (ஒப்பந்தம்)

14. காலிப் பணியிடம்

## *வரலாற்றுத்துறை*

15. காலிப் பணியிடம்

## *புவியியல் துறை*

16. காலிப் பணியிடம்

## *பொருளறிவியல் துறை*

17. முனைவர் (திருமதி.) **அ.வசந்தி**
எம்.எஸ்ஸி., எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி., டி.ஜி.டி.,
உதவிப் பேராசிரியர் மற்றும் பொருளறிவியல் துறைத்தலைவர்

18. முனைவர் (திருமதி.) **இரா.சகாய மேரி**
எம்.எஸ்ஸி., எம்.ஏ., (சமூகவியல்), எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி.,
உதவிப் பேராசிரியர் மற்றும் கணினி அறிவியல் துறை (பொறுப்பு)

19. காலிப் பணியிடம்

## *உயிரறிவியல் துறை*

20. முனைவர் (திருமதி.) **க.சாய்குமாரி**
எம்.எஸ்ஸி., எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி., உதவிப் பேராசிரியர் மற்றும்
துறைத்தலைவர்

21. காலிப் பணியிடம்

## *கணினி அறிவியல் துறை*

22. திரு. **கோ. கந்தவேல்**
எம்.ஏ., எம்.பி.எட்., ஏடிசிஏ., உதவிப்பேராசிரியர் (ஒப்பந்தம்)

## *கணிதத்துறை*

23. முனைவர் (திரு.) **ஆ. மோகன்குமார்**
எம்.எஸ்ஸி., எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி., உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

24. திரு. **சொ. மதிவாணன்**
எம்.எஸ்.சி., எம்.பி.எட்., உதவிப்பேராசிரியர் (ஒப்பந்தம்)



இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

## ***உடற்கல்வித்துறை***

25. முனைவர் திருமதி. **அ.ஜெமிமா**
எம்.ஏ., எம்.எட்.,பி.எச்.டி., தேர்வுநிலை உடற்கல்வி இயக்குநர் மற்றும் துறைத்தலைவர்

26. நுண்கலை நிகழ்த்துநர் காலிப் பணியிடம்

27. செயற்கலை நிகழ்த்துநர் காலிப் பணியிடம்

## ***நூலகத்துறை***

28. காலிப் பணியிடம்

## ***தேர்வுக் கட்டுப்பாட்டாளர்***

29. முனைவர் (திருமதி) **இரா. சகாயமேரி**
எம்.எஸ்ஸி., எம்.ஏ., (சமூகவியல்), எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி.,
உதவிப் பேராசிரியர் மற்றும் கணினி அறிவியல் துறை (பொறுப்பு)

## ***கௌரவ விரிவுரையாளர்கள்***

## ***தமிழ்துறை***

30. திருமதி.ஸ்ரீ **ஸ்ரீதேவி** எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.,
முனைவர் திருமதி. **அ. வசந்தா**
எம்.ஏ., எம்.ஃபில்., பி.எச்.டி., (தமிழ்). எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி., (கல்வியியல்)

## ***கல்வியியல் துறை***

31. திரு. **சு. தர்மராஜு**
எம்.எஸ்.சி.(விலங்கியல்), எம்.ஏ.(உளவியியல்), எம்.ஏ.(சமூகவியல்), எம்.எட்.,
எம்.ஃபில்.(கல்வியியல்), டிசிஏ.

32. முனைவர் (திரு) **நா.ரா. பிரகாஷ்**
எம்.எஸ்.சி.(தாவரவியல்), எம்.எஸ்.சி.(உளவியல்), எம்.ஃபில்.(தாவரவியல்).
எம்.எட்., பி.எச்.டி.(கல்வியியல்),

33. முனைவர் (திருமதி.) **ச. ரமா**
எம்.எஸ்.சி.(வேதியியல்), எம்.எட்., எம்.ஃபில்.(கல்வியியல்), பி.எச்.டி.(கல்வியியல்),
எம்.எஸ்ஸி.(உளவியியல்), டி.சி.ஏ.,

## ***பொருளறிவியல் துறை***

34. திரு. **ம. மோகன்பாபு**
எம்.எஸ்.சி.(இயற்பியல்), எம்.எட்.(கல்வியியல்),
எம்.ஃபில்.(கல்வியியல்), எம்.ஏ.,(உளவியல்)



நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

## ஆசிரியரல்லாப் பணியாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | கண்காணிப்பாளர் | திருமதி. **மு. உஸ்னா பேகம்** |
| 2. | உதவியாளர் | திரு. **அ. கௌதமன்,** பி.ஏ., |
| 3. | உதவியாளர் | திருமதி. **அ. சித்ரா பார்வதி,** பி.எஸ்சி.,பி.எட்., |
| 4. | இளநிலை உதவியாளர் (தே.நிலை) | திருமதி. **ப. உமா மகேஸ்வரி,** எம்.ஏ., |
| 5. | இளநிலை உதவியாளர் | திரு. **பூ. கௌதம்,** பி.டெக்., |
| 6. | இளநிலை உதவியாளர் | காலிப் பணியிடம் |
| 7. | தட்டச்சர் | திருமதி. **ரா. முத்துலெட்சுமி,** பி.எஸ்சி.,பி.எட்., |
| 8. | தட்டச்சர் | திருமதி. **வே. செல்வி,** எம்.எஸ்சி., |
| 9. | ஆய்வக உதவியாளர் | திருமதி. **தே. வண்டார்குழலி** |
| 10. | ஆய்வக உதவியாளர் | காலிப் பணியிடம் (3) |
| 11. | பதிவறை எழுத்தர் | திருமதி. **ரா. வெண்ணிலா,** GNM. |
| 12. | உடற்கல்வி பயிற்றுநர் | திருமதி. **G.தமிழ்மணி,** B.P.Ed., |
| 13. | சுருள்பட ஓட்டுநர் | காலிப் பணியிடம் |
| 14. | ஓவிய ஆசிரியர் | காலிப் பணியிடம் |
| 15. | நெசவு ஆசிரியர் | நெசவு பயிற்றுநர் |
| 16. | கைவினை பயிற்சி பயிற்றுவிப்பவர் | காலிப் பணியிடம் (2) |
| 17. | கம்மியர் | காலிப் பணியிடம் |
| 18. | கொல்லர் | காலிப் பணியிடம் |
| 19. | பட்டறை தொழிலாளர் | காலிப் பணியிடம் (2) |
| 20. | மரவேலை செய்பவர் | காலிப் பணியிடம் (2) |
| 21. | தச்சர் | காலிப் பணியிடம் (2) |
| 22. | அலுவலக உதவியார் | காலிப் பணியிடம் (11) |
| 23. | துப்புரவாளர் | காலிபணியிடம் |
| 24. | நீர் வழங்குபவர் | திரு. **ப. ரவி** |
| 25. | தோட்டக்காரர் | காலிபணியிடம் |
| 26. | பெருக்குபவர் (சி.நிலை) | திரு. **செ. தனலட்சுமி** |
| 27. | பெருக்குபவர் (தே.நிலை) | திருமதி. **வி. சுபாஷினி** |
| 28. | பெருக்குபவர் (தே.நிலை) | காலிபணியிடம் |
| 29. | காவலர் | திரு. **த. சுகுமார்** |
| 30. | காவலர் | காலிபணியிடம் (2) |
| 31. | குறியீட்டாளர் | காலிபணியிடம் |



ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு.

# கல்லூரி அறக்கட்டளை பரிசுகள்

1. **சுப்பிரமணிய ஐயர் வெள்ளிப் பதக்கம் :** இளநிலைப் பட்டப்படிப்பில் அதிகமான மதிப்பெண் பெறும் மாணவருக்கு வழங்கப்படும்.

2. **ஆசிரியர் கல்லூரி மாணவர்கள் அறக்கட்டளை சேமிப்பு நிதி:**
   1. கல்வியியல் தாள்களில் முதல் மதிப்பெண் பெறும் மாணவருக்கு புத்தகம் பரிசாக வழங்கப்படும்.
   2. பி.எட். செய்முறைத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் மாணவருக்கு புத்தகம் பரிசாக வழங்கப்படும்.

3. **பேரறிஞர் அண்ணா அறக்கட்டளை நிதி :**
   1. பி.எட்., எழுத்துத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் மாணவருக்கு புத்தகம் பரிசாக வழங்கப்படும்.
   2. பி.எட்., செய்முறைத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் மாணவருக்கு புத்தகம் பரிசாக வழங்கப்படும்.

4. **லார்ட் பென்ட்லாண்டு பரிசு :** பி.எட்., ஆங்கில விருப்பப் பாடத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் மாணவருக்கு புத்தகம் பரிசளிக்கப்படும்.

5. **ஜெயராம் உதவித்தொகை நிதி :** எம்.எட்., தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் மாணவருக்கு வழங்கப்படும்.

6. **டாக்டர் ஜெயலலிதா அறக்கட்டளை :** (விளையாட்டுத்துறை)



காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

# ஆசிரியர் கல்லூரி பழைய மாணவர்கள் மன்ற அறக்கட்டளைப் பரிசுகள்

| எண் | அறக்கட்டளை நிறுவனர் | அறக்கட்டளையின் பெயர் | தொகை ரூ | அறக்கட்டளையின் தன்மை |
|---|---|---|---|---|
| 1. | முனைவர் எஸ்.எம் சுந்தரராஜ் கல்வியியல் துறைப் பேராசிரியர் | முனைவர் எஸ்.எம். சுந்தரராஜ் | 1,000 (ஆயிரம் மட்டும்) | ஒவ்வொரு ஆண்டும் கல்வி உளவியல் பாடத்தில் முதல் மற்றும் இரண்டாம் இடத்தில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கான பரிசு. |
| 2. | முனைவர் முத்துசாமி அமெரிக்கா தமிழர் | முனைவர் முத்துசாமி | 10,000 (பத்தாயிரம் மட்டும்) | ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு பாடத்தில் முதன்மையாகத் தேறும் மாணவர்களுக்கான பரிசு. (விருப்பப் பாடங்கள், பொதுத்தாள்கள். 3, செய்முறை பயிற்சி 1) |
| 3. | முனைவர் கிருஷ்ணவேணி முன்னாள் முதல்வர், சைதை | சீதாலட்சுமி நினைவுப் பரிசு | 1,000 (ஆயிரம் மட்டும்) | நடப்பு ஆண்டின் பி.எட்., படிப்பில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கான பரிசு |
| 4. | பேரா. பழனியப்பன் | பேரா. பழனியப்பன் | 1,000 (ஆயிரம் மட்டும்) | 1. பி.எட்., தேர்வில் கல்வியியல் பாடங்களில் அதிக மதிப்பெண் பெறும் மாணவருக்கான பரிசு. 2. எம்.எட்., தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் மாணவருக்கான பரிசு. |
| 5. | வி.செ. இதில் அகமது தமிழாசிரியர் பயிற்சி | உமறுபுலவர் அறக்கட்டளை பரிசு | 2,000 (இரண்டாயிரம் மட்டும்) | பி.லிட்., தகுதியில் பி.எட்., படிக்கும் மாணவர்களுள் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கான பரிசு, தமிழ் விருப்பப் பாடம் 2ல் முதல், இரண்டாம், மூன்றாம் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கான பரிசு. |



கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

| என் | அறக்கட்டளை நிறுவனர் | அறக்கட்டளை பெயர் | தொகை ரூ | அறக்கட்டளையின் தன்மை |
|---|---|---|---|---|
| 6. | முனைவர் பி.இரத்தினசபாபதி முன்னாள் பேராசிரியர் | முனைவர் பி.இரத்தினசபாபதி அறக்கட்டளை | 3,000 (மூவாயிரம் மட்டும்) | தமிழ் விருப்பப் பாடம் 2ல் முதல், இரண்டாம், மூன்றாம் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கான பரிசுகள். |
| 7. | முனைவர் ஆர்.பிரேமா பாரதி மகளிர் கல்லூரி | இராமானுஜர் ஐயங்கார் நினைவுப் பரிசு | 3,000 (மூவாயிரம் மட்டும்) | ஓவியப்போட்டியில் முதல், இரண்டாவது பரிசுகள். |
| 8. | திரு.டி.செல்வக்குமார் முன்னாள் ஓவிய ஆசிரியர் | செல்வக்குமார் ஓவிய அறக்கட்டளை பரிசு | 1,000 (ஆயிரம் மட்டும்) | ஓவியப்போட்டியில் முதல், இரண்டாவது பரிசுகள். |
| 9. | திருமதி பானுமதி வெங்கட்ராமன் முன்னாள் பேராசிரியர் ஆங்கிலத்துறை | இந்திரா ராவ் அறக்கட்டளை பரிசு | 2,000 (இரண்டாயிரம் மட்டும்) | ஆங்கில விருப்பப் பாடம் பயிலும் மாணவர்களின் ஓவியம், கைவினைக் கலைகளில் சிறப்பிடம் பெறுபவருக்கானப் பரிசு. |
| 10. | முனைவர் சு.வஜ்ரவேலு முன்னாள் இணைப் பேராசிரியர் தமிழ்த்துறை | வஜ்ரவேலு ஜீவா அறக்கட்டளை பரிசு | 5,000 (ஐயாயிரம் மட்டும்) | வினாடி?வினாவில் முதல் மற்றும் இரண்டாவது பரிசுகள் பெறுபவருக்கானப் பரிசுகள். |
| 11. | முனைவர் கெ.விஸ்வநாதன் முன்னாள் துணைவேந்தர் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் | முனைவர் பேராசிரியர் கெ.விஸ்வநாதன் அறக்கட்டளை | 25,000 (இருபத்தைந்தாயிரம் மட்டும்) | எம்.எட்., எம்ஃபில், படிப்பில் முதல் மூன்று மதிப்பெண்கள் பெற்ற ஆய்வேடுகள். |
| 12. | முனைவர் வெ.சந்திரசேகரன் இணைப்பேராசிரியர் கல்வியியல் துறை | முனைவர் பேராசிரியர் து.குமரன் அறக்கட்டளை | 10,000 (பத்தாயிரம் மட்டும்) | எம்.எட்., உளவியல் பாடத்தில் முதல் இரண்டு மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு |
| 13. | முனைவர் கே.ராஜ் ஓய்வு பெற்ற உடற்கல்வி இயக்குநர் | முனைவர் கே.ராஜு நினைவு அறக்கட்டளை | 25,000 (இருபத்தைந்தாயிரம் மட்டும்) | சிறந்த விளையாட்டு வீரருக்கான பரிசு. |

## கட்டண விவரம் 2022 - 2023

| B.Ed. | First Year | | | Second Year | | |
|---|---|---|---|---|---|---|
| Govt. A/C. Heads | SC-ST | D.Ab. | Others | SC-ST | D.Ab. | Others |
| Tution Fee | 0 | 0 | 1000 | 0 | 0 | 1000 |
| Admission Fee | 5 | 5 | 5 | 0 | 0 | 0 |
| Medical Fee | 5 | 5 | 5 | 5 | 5 | 5 |
| **TOTAL** | **10** | **10** | **1010** | **5** | **5** | **1005** |
| **PD-1** | | | | | | |
| Application | 50 | 0 | 50 | -- | -- | -- |
| Arts & Craft | 10 | 0 | 10 | 10 | 0 | 10 |
| A.V.E. | 20 | 0 | 20 | 20 | 0 | 20 |
| Calendar | 20 | 0 | 20 | 20 | 0 | 20 |
| College Day | 20 | 0 | 20 | 20 | 0 | 20 |
| C.T. Camp | 200 | 0 | 200 | -- | -- | -- |
| Games | 100 | 0 | 100 | 100 | 0 | 100 |
| Library | 20 | 0 | 20 | 20 | 0 | 20 |
| Magazine | 25 | 0 | 25 | 25 | 0 | 25 |
| Model Exam. | 70 | 0 | 70 | 70 | 0 | 70 |
| Recod | 60 | 0 | 60 | 60 | 0 | 60 |
| SSL | 10 | 0 | 10 | 10 | 0 | 10 |
| Teacher Union | 20 | 0 | 20 | 20 | 0 | 20 |
| **TOTAL** | **625** | **0** | **625** | **375** | **0** | **375** |
| For Computer Students Only | 100 | 0 | 100 | 100 | 0 | 100 |
| **PD II** | | | | | | |
| Convocation | 30 | 30 | 30 | 0 | 0 | 0 |
| Insurance | 15 | 15 | 15 | 15 | 15 | 15 |
| Flag Day | 5 | 5 | 5 | 5 | 5 | 5 |
| YRCS | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| University Fee | 635 | 635 | 635 | | | |
| **TOTAL** | **705** | **705** | **705** | **40** | **40** | **40** |
| **GRAND TOTAL (except computer student)** | **1340** | **715** | **2340** | **420** | **45** | **1420** |
| **GRAND TOTAL (computer student)** | **1440** | **715** | **2440** | **520** | **–** | **1520** |



உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

## கட்டண விவரம் 2022 - 2023

| M.Ed. | First Year | | | Second Year | | |
|---|---|---|---|---|---|---|
| Govt. A/C. Heads | SC-ST | D.Ab. | Others | SC-ST | D.Ab. | Others |
| Tution Fee | 0 | 0 | 1500 | 0 | 0 | 1500 |
| Admission Fee | 5 | 5 | 5 | 0 | 0 | 0 |
| Medical Fee | 5 | 5 | 5 | 5 | 5 | 5 |
| **TOTAL** | **10** | **10** | **1510** | **5** | **5** | **1505** |
| **PD-1** | | | | | | |
| Application | 50 | 0 | 50 | -- | -- | -- |
| Arts & Craft | 10 | 0 | 10 | 10 | 0 | 10 |
| A.V.E. | 20 | 0 | 20 | 20 | 0 | 20 |
| Calendar | 20 | 0 | 20 | 20 | 0 | 20 |
| College Day | 20 | 0 | 20 | 20 | 0 | 20 |
| Games | 100 | 0 | 100 | 100 | 0 | 100 |
| Library | 20 | 0 | 20 | 20 | 0 | 20 |
| Magazine | 25 | 0 | 25 | 25 | 0 | 25 |
| Model Exam. | 70 | 0 | 70 | 70 | 0 | 70 |
| SSL | 10 | 0 | 10 | 10 | 0 | 10 |
| Teacher Union | 20 | 0 | 20 | 20 | 0 | 20 |
| **TOTAL** | **365** | **0** | **365** | **315** | **0** | **315** |
| **PD 2** | | | | | | |
| Convocation | 30 | 30 | 30 | -- | -- | -- |
| Insurance | 15 | 15 | 15 | 15 | 15 | 15 |
| Flag Day | 5 | 5 | 5 | 5 | 5 | 5 |
| YRCS | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| TNTEU Student University Fee | 355 | 355 | 355 | 40 | 40 | 40 |
| Other University Student University Fee | 635 | 635 | 635 | | | |
| **TOTAL (Except Other University)** | **425** | **425** | **425** | | | |
| **TOTAL (Other University)** | **705** | **705** | **705** | **40** | **40** | **40** |
| **GRAND TOTAL (TNTEU Student)** | **800** | **435** | **2300** | | | |
| **GRAND TOTAL (Other University student)** | **1080** | **715** | **2580** | **360** | **45** | **1860** |



தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

| M.Phil | | |
|---|---|---|
| Govt. A/C. Heads | SC-ST | Others |
| Tution Fee | 0 | 1500 |
| Admission Fee | 5 | 5 |
| Medical Fee | 5 | 5 |
| **TOTAL** | **10** | **1510** |
| **PD-1** | | |
| Application | 50 | 50 |
| A.V.E. | 20 | 20 |
| Calendar | 20 | 20 |
| College Day | 25 | 25 |
| Computer Fees | 100 | 100 |
| Games | 100 | 100 |
| Library | 100 | 100 |
| Magazine | 25 | 25 |
| **TOTAL** | **440** | **440** |
| **PD 2** | | |
| Convocation | 30 | 30 |
| Insurance | 15 | 15 |
| Flag Day | 5 | 5 |
| YRCS | 20 | 20 |
| TNTEU Student University Fee | 355 | 355 |
| **Other University Student University Fee** | **635** | **635** |
| **TNTEU Student** | **425** | **425** |
| **Total Other University Student** | **705** | **705** |
| **GRAND TOTAL (TNTEU Student)** | **875** | **2375** |
| **GRAND TOTAL (Other University)** | **1155** | **2655** |



கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

| Ph.D. | | |
|---|---|---|
| Govt. A/C. Heads | SC-ST | Others |
| Tution Fee | 0 | 1500 |
| Admission Fee | 5 | 5 |
| Medical Fee | 5 | 5 |
| **TOTAL** | **10** | **1510** |
| **PD-1** | | |
| Application | 50 | 50 |
| A.V.E. | 100 | 100 |
| Calendar | 20 | 20 |
| College Day | 25 | 20 |
| Computer Fees | 1000 | 100 |
| Games | 100 | 100 |
| Library | 1000 | 100 |
| Magazine | 25 | 25 |
| **TOTAL** | **2320** | **2320** |
| **PD 2** | | |
| Insurance | 15 | 15 |
| Flag Day | 5 | 5 |
| YRCS | 20 | 20 |
| **TOTAL** | **40** | **40** |
| **GRAND TOTAL** | **2370** | **3870** |

## உதவித் தொகை

1. கல்லூரியிலிருந்து பரிந்துரைக்கப்பட்ட தகுதியான விண்ணப்பங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசின் உதவித் தொகை வழங்கப்படுகிறது. கல்லூரியில் சேர்ந்த 15 நாட்களுக்குள் பயிற்சி ஆசிரியர், விண்ணப்பங்களை அளித்திடல் வேண்டும். அதற்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.
2. கல்லூரி விடுதியில் தங்கிப் பயிலும் அல்லது விடுதியில் இல்லாத மாணவர்களுக்கும் தகுதியின் அடிப்படையில் ஆதி திராவிட நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.
3. ஒழுக்கம், 90 சதவீதம் வருகைப் பதிவு முதலியவற்றின் அடிப்படையில் இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது. இதில் ஏதாவது குறைகள் இருந்தால் உதவித் தொகை நிறுத்தி வைக்கப்படுகிறது.

## தமிழ்நாடு அரசு பேராட்சியர் மற்றும் அரசு பொறுப்பு சொத்தாட்சியர் அறக்கட்டளை கல்வி உதவித்தொகை

சென்னை உயர்நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் தமிழ்நாடு அரசு பேராட்சியர் மற்றும் அரசு பொறுப்பு சொத்தாட்சியர் அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வரும் அறக்கட்டளைகள் மூலம் இளநிலை கல்வியியல் **(B.Ed.)** மற்றும் முதுநிலை கல்வியியல் **(M.Ed.)** பட்டப்படிப்பு பயிலும் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு, முறையே ரூ.30,000/- மற்றும் ரூ.40,000/- (ஓராண்டுக்கு மட்டும்) வழங்கப்படுகிறது. **B.Ed.** மாணவர்களுக்கு அவர்கள் இளநிலை பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும், **M.Ed.** மாணவர்களுக்கு அவர்கள் **B.Ed.** பட்ட வகுப்பில் பெற்ற மதிப்பெண் மற்றும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையிலும் தேர்வு செய்யப்படுகின்றனர்.

## இரயில் பயணச் சலுகை

இரயில் பயணச் சலுகைகளுக்கும், மாதாந்திரப் பயணச் சலுகைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தினைச் கல்லூரி அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். அங்கீகரிக்கப்பட்ட விடுமுறைகளில் கல்லூரியிலிருந்து தன் சொந்த ஊருக்குச் செல்லவும், விடுமுறையின் முடிவில் திரும்பி வரவும், இப்பயணச் சலுகையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் இச்சலுகையைக் கல்விப் பயணம், கல்லூரியால் ஏற்பாடு செய்யப்படும் சுற்றுலா

ஆகியவற்றிற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் பிற விடுமுறை நாட்களில் இச்சலுகை கிடைக்காது. 25 வயதிற்குட்பட்டவர்களுக்கு மட்டுமே இச்சலுகை உண்டு. இதன் முழு விவரங்களையும் கல்லூரி அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## கொடி வணக்கம் & அணிவகுப்பு

நாள்தோறும் கல்லூரிக்குள் நுழையும்போது வளாகத்தில் உள்ள தேசிய சின்னத்திற்கு வணக்கம் செய்திட வேண்டும். ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்கள் காலை ஒன்றுகூடி கொடியேற்றிப் இறை வணக்கத்துடன் பணியை ஆரம்பித்திட வேண்டும். இந்த நாட்களில் ஆசிரிய பயிற்சியாளர்கள் அனைவரும் குறிப்பிட்ட சீருடை அணிந்து வரவேண்டும். முன் அனுமதியின்றி விடுப்பு எடுப்பவர்கள் கடுமையாக எச்சரிக்கப்படுவர். அன்றைய தினத்திற்கு முழுநாள் வருகைப் பதிவு தரப்படமாட்டாது. இரண்டாம் முறையும் வரவில்லை எனில் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முக்கியமாக சுதந்திர தின விழா, குடியரசு தின விழாவில் கொடியேற்றும்போது தவறாது கலந்துகொள்ள வேண்டும்.

## சீருடை

பி.எட். & எம்.எட். மாணவர்களின் சீருடை கீழமைந்த அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| கல்வியியல் ஆண்டு | முதல் வருடம் | இரண்டாம் வருடம் |
|---|---|---|
| பி.எட். | கருப்பு பேண்ட், வெளிர் நீலம் நிற அரைக்கை சட்டை | கருப்பு பேண்ட், க்ரே நிற அரைக்கை சட்டை |
| எம்.எட். | கருப்பு நிற பேண்ட், கிரீம் நிற அரைக்கை சட்டை | கருப்பு பேண்ட், மெரூன் நிற அரைக்கை சட்டை |

திங்கட்கிழமைகளில் வெள்ளை முழுக்கால் சட்டை மற்றும் வெள்ளை சட்டை அணிய வேண்டும். மேலும் எல்லா நாட்களிலும் கருப்பு பெல்ட், கருப்பு முழுக்காலனி மற்றும் கருப்பு காலுறை அணிந்து வரவேண்டும்.

## உடற்கல்வி

மாணவர்கள் அனைவரும் உடற்கல்வி பயிற்சி பெற வேண்டும். எல்லா முக்கியமான விளையாட்டுகளும் விளையாட சிறந்த மைதானம் இக்கல்லூரி வளாகத்தில் உள்ளது. மாணவ ஆசிரியர்கள் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் நடத்தும் போட்டிகளிலும், பிற கல்வியியல் கல்லூரிகள் நடத்தும் போட்டிகளிலும் பங்குபெற வேண்டும். மேலும் மாணவ ஆசிரியர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு துறைகளுக்கிடையே நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளிலும் ஆர்வமுடன் பங்குபெற வேண்டும்.

## கற்பித்தல் செயல் திட்டம்

